DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: தமிழரசு | Father's Name: முத்தாகவுண்டர் |
| Village: ஆவாரங்குப்பம் | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 63 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 20.02.2024

**O.S.No.55/2018** **பி.வா.சா.2**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. எனக்கு நீதிமன்றத்தில்இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வந்ததா என்றால் இல்லை. நான் தியாகு அழைத்ததன் பேரில் நீதிமன்றம் வந்தேனா அல்லது ராமமூர்த்தி அழைத்ததன் பேரில் நீதிமன்றம் வந்தேனா என்றால் இருவரும் அழைத்ததன் பேரில் வந்தேன். தியாகு, ராமமூர்த்தி இருவரும் என்னுடன் நீதிமன்றம் வந்திருக்கிறார்களா என்றால் ராமமூர்த்தி மட்டும் வந்திருக்கிறார். தியாகு, ராமமூர்த்தி இருவரும் ஒற்றுமையாக இருக்கிறார்களா என்றால் ஒற்றுமையாகத்தான் இருக்கிறார்கள்.

2. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என எதனை அடிப்படையாக குறிப்பிட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து வாதி வெங்கடாச்சலத்திற்கு எந்த ஆவணத்தின்படி பாத்தியம் என்றால் அது எனக்கு தெரியாது. 22.11.1993 அன்று வாசு (எ) விஜயசங்கர் கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை, அடமானப் பத்திரம் தான் எழுதிக்கொடுத்தார்.

3. நான் சொல்லும் அடமானக் கடன் பத்திரத்தில் நான் சாட்சிக் கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் சொல்லும்

அடமானக் கடன் பத்திரத்தை ராமமூர்த்தி மூலமாகவோ அல்லது என் மூலமாகவோ தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் தியாகு மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 22.11.1993 தேதியிட்ட கிரைய ஆவணம் ராமமூர்த்தி மூலமாகவே இவ்வழக்கில் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.

4. 1ம் பிரதிவாதி தரப்பு எனது குறுக்கு விசாரணையில் 1வது பத்தியில் முதல் 3 வரிகளில் 22.11.1993 அன்று வாசு (எ) விஜயசங்கர் என்பவருக்கு கிரையப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். வாசு (எ) விஜயசங்கர் என்பவருக்கு 1ம் பிரதிவாதி ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.263/15–ல் 2.5 செண்ட் மற்றும் 263/20–ல் 33 செண்ட் ஆகும்.

5. என்முன் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் தலைப்பு என்னவாக உள்ளது என்றால் சுத்த விக்கிரய பத்திரம் என உள்ளது. என் முன் காட்டப்படும் 22.11.1993 தேதியிட்ட பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தான் ரூ.18,500/– தொகைக்கு அடமானக்கடன் பத்திரமாக எழுதிக்கொடுத்ததாக நான் சொல்கிறேனா என்றால் ஆமாம். என்முன் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த இடத்திலாவது அந்த ஆவணம் அடமானக் கடன் பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

6. அதேபோல டி.சி.ராஜவேலு என்பவருக்கு ராமமூர்த்தி என்பவரும் வாசு (எ) விஜயசங்கரும் சேர்ந்து ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் என்முன் காட்டப்படும் 19.09.1994 தேதியிட்ட பி.வா.சா.ஆ 2 ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வழக்கு சொத்து சர்வே எண்கள்

குறிப்பிட்டு கிரையம் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறாக எழுதப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன்.

7. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தின்படி வழக்கு சொத்துக்கள் டி.சி.ராஜவேலு என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் அது தவறாகும். எதனடிப்படையில் நான் தவறாக எழுதப்பட்டிருப்பதாக சொல்கிறேன் என்றால் அது எனக்கு தெரியவில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் ராஜவேலு பெயருக்கு பட்டா வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் முன் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3. நிலவுடைமை பதிவேடு ஆவணத்தில் உள்ள புகைப்படம் டி.சி.ராஜவேலுவினுடையது என்றால் சரிதான்.

8. வழக்கு சொத்தின் முழுவதும் உரிமை அடைந்த டி.சி.ராஜவேலு வாதியின் தந்தையின் பெயருக்கு வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின்படி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது தவறாகும். என் முன் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் என்ன தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சுத்த விக்கிரய பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளது. எதனடிப்படையில் நான் தவறாக எழுதப்பட்டிருப்பதாக சொல்கிறேன் என்றால் இந்த ஆவணத்தை போர்ஜரியாக எழுதியிருப்பதாக நான் நினைக்கிறேன்.

9. என் முன் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரமானது வழக்கு சொத்து சர்வே எண் விவரங்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் இறந்துவிட்டதால் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என்று தெரிவித்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ஆமாம், அவ்வாறு தான் தாக்கல் செய்திருக்கிறார். என் முன் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணமான நிலவுடைமை பதிவேடு ஆவணத்தில் உள்ள

புகைப்படம் வாதியின் தந்தை பெருமாள் நாயுடுவின் புகைப்படம் என்றால் சரிதான்.

10. வழக்கு சொத்து சம்மந்தமாக உரிமை மூல ஆவணங்கள் ஏதாவது என் மூலமாக குறியீடு செய்யப்பட்டதா என்றால் இல்லை. 05.03.1997 ல் சக்கரவர்த்தி நாயுடு என்பவர் எழுதிவைத்ததாக தெரிவித்துள்ள உயில் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. அந்த உயில் ஆவணத்தை என் மூலமாக நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் தெரிவித்துள்ள 04.01.2012 தேதியிட்ட பாக பாத்திய விடுதலைப்பத்திரத்தை என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

11. வழக்கு சொத்தை குறித்து சக்கரவர்த்தி நாயுடு உயில் எழுதிவைப்பதற்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல, அவருக்கு உரிமையுள்ளது. பிரதிவாதிகளும் அவர்கள் குடும்பத்தினரும் கிரையம் செய்து கொடுத்துவிட்ட சொத்துக்களைப் பொறுத்து விடுதலைப்பத்திரம் மற்றும் உயில் ஆவணங்களை தவறாக ஏற்படுத்தி அபகரிக்க முயற்சிக்கின்றனர் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் நானே தரப்பினர் போல சாட்சியத்தில் குறிப்பிட்டு தவறான சங்கதிகளை தெரிவித்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

12. எனக்கு வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாமல் தவறான சங்கதிகளை குறிப்பிட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாதிக்கு வழக்கில் வேண்டியிருப்பது போல பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையின் போதும் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நான் உள்ளதை தான் சொல்லியுள்ளேன்.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது**.